மதுராந்தகம், சார் ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர். திரு.கிள்ளி சந்திர சேகர் இ.ஆ.ப.,

மூ.மு.887/2017/ஆ

நாள் 22.07.2017

பொருள். கிராம நிர்வாகம் - காஞ்சிரம் மாவட்டம் - மதுராந்தகம் கோட்டம் மதுராந்தகம் வட்டம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டது - கிராம நிர்வாக அலுவலரர்களாக பணிநியமனம் வழங்கப்பட்ட திரு.பொ.யுவராஜ், திரு.க.தமிழரசன் மற்றும் திரு.க.சுப்பிரமணி என்பவர்களின் பணியினை வரன்முறை செய்து உத்தரவிடுதல் - சார்பு.

படிக்க. 1.மதுராந்தகம், வட்டாச்சியரின் அவர்களின் ந.க.எண்.1942/2017/அ3,நாள்.28.04.2017.
2. தொடர்புடைய ஆவணங்கள்.

''''''''''''''''''''

உத்திரவு:-

காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலகில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி - IV ன் மூலம் கிராம நிர்வாக அலுவலரர்களாக தேர்வு செய்யப்பட்டு, மதுராந்தகம் கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.பொ.யுவராஜ், க.தமிழரசன் மற்றும் திரு.க.சுப்பிரமணி ஆகியோருக்கு கிராம நிர்வாக அலுவலராக பணிநியமனம் வழங்கி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

படிக்கப்பட்ட 1 - ல் காணும் மதுராந்தகம் வட்டாட்சியர் தனது அறிக்கைகளில் திரு.பொ.யுவராஜ், க.தமிழரசன் மற்றும் திரு.க.சுப்பிரமணி ஆகியோர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் எந்த குற்றக்குறிப்பாணையுமின்றி பணிபுரிந்து வருகின்றார்கள். எனவே மேற்படி கிராம நிர்வாக அலுவலர்களை பணிவரன்முறை செய்து உத்தரவிடலாம் என தெரிவித்துள்ளார்.

மேற்படி மதுராந்தகம் வட்டாட்சியரின் பரிந்துரையின்படி கீழ்க்கண்டவாறு கிராம நிர்வாக அலுவலர்களை அவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்ட நாளில் கிராம நிர்வாக அலுவலர் பணிநிலையில் பணிவரன்முறை செய்தும், தகுதிகாண்பருவம் தொடங்கியும் உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | கிராம நிர்வாக அலுவலர் பெயர் மற்றும் கிராமம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திரு.பொ.யுவராஜ் சிலாவட்டம் | 18.09.2015 முற்பகல் | 18.09.2015 முற்பகல் |
| 2. | திரு.க.தமிழரசன் அருங்குணம் | 26.06.2015 முற்பகல் | 26.06.2015 முற்பகல் |
| 3. | திரு.நா.சுப்பிரமணி படாளம் | 29.10.2015 முற்பகல் | 29.10.2015 முற்பகல் |

எனவே மேற்படி நபர்களின் பணியினை வரன்முறை செய்த உத்தரவு விவரத்தினை தனியர்களின் பணிப்பதிவேடுகளில் தக்க பதிவுகளை மேற்கொள்ள மதுராந்தகம் வட்டாட்சியருக்கு உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு தனியர்களின் பணிப்பதிவேடு

Chandra Sekh 24/7/17

சார் ஆட்சியர்,
மதுராந்தகம்.

பெறுநர்
1. வட்டாட்சியர்,
மதுராந்தகம்.
2. சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள்.

24/7/17

நகல். காஞ்சிபுரம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு-தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.